Arimaa Nokku

# அரிமா நோக்கு

15: 3 அக்டோபர் 2021

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் (UGC - CARE LIST)
ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

ISSN 2320-4842

அரிமா நோக்கு
15 : 3 அக்டோபர் 2021

நாவல் எழுத்தில் காணிக்காரர்களின் வாழ்வியல்
- ந. இரத்தினக்குமார் 05

A Review of the English Language Textbooks Studies in India
-R. Anandarasu & D. Bagya 10

ஆழ்வார் பாசுரங்களில் அகத்திணைக் கூறுகள்
- பா. கவிதா 16

தமிழ்-மராட்டி மொழி இலக்கணங்களில் சந்தி
- வீ. வினோதா 20

காரைக்காலம்மையாரின் யாப்பியல்
- ப. திருஞானசம்பந்தம் 22

அச்சுக்கலை வரலாற்றில் தரங்கம்பாடி
-ஆ. ராஜா, சி. வேல்முருகன் & த. ஆதித்தன் 26

பலதேவன் வழிபாடு வளர்ந்த இடமும் இணைந்த இடமும்
- மு. அருணாசலம் 28

சங்கப் பாக்களில் தமிழர் இசைமரபு
- ப. ராஜசேகர் 39

அறுவகை இலக்கணத்தில் சொல்லிலக்கணக் கோட்பாடுகள்
- பி. ஜீவா 42

பெருமாள் அம்மானை எனும் சுவடியால் அறியப்படும் செய்திகள்
- ச. ராஜேஸ்வரி 47

பாரதியார் கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள்
- சி. சந்திரகுமாரி 51

தமிழ் நிகண்டுகள் உருவாக்கம்
- க. இராமசுதா 55

மரபுவழிக் கல்விக்குப்பெருமை சேர்த்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
- இரா. சந்தானகிருஷ்ணன் 59

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தமிழ்த் தாள் குறித்து ஒரு கருத்து

தமிழக அரசு அண்மையில் வெளியிட்டிருக்கும் கல்வித்துறை சார்பான ஓர் அறிவிப்புத் தமிழ் உள்ளங்களுக்கு உவகை மழைப் பொழிவாக அமைந்தது. தமிழகத்தில் எத்துறைப் படிப்பை மேற்கொண்டவர்களும் அவர்களுக்குப் பாடமாக அமைந்த பகுதிகளில் தேர்வுகள் எழுதுவதுபோலவே, தமிழ் மொழியிலும் ஒரு தேர்வு எழுதவேண்டும். இனி இத்தமிழ்த் தாள் தேர்ச்சியும் கட்டாயமாகும். மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம், வணிகவியல், கல்வியியல் என எத்துறைப் படிப்பாயினும் தமிழ்த் தாள் ஒன்று இருக்கும். தாய்மொழியாகத் தமிழ் இல்லாதவர் களுக்கு இடையூறாக இருக்குமே என்று எண்ணவேண்டிய தில்லை. தமிழ்நாட்டில் வாழ்பவர்களுக்குத் தமிழ் பயில வேண்டும் என்னும் அக்கறையைத் தூண்டி வளர்க்க இத் திட்டம் துணை செய்யும்.

தாய்மொழியாக் தமிழைப் பெற்றவர்கள் தமக்கு உணர்வாய் ஒளியாய், தாம் இன்னார் என்னும் அடையாளமாய் உள்ள தமிழில் ஒரு தாள் எதிர்கொள்வது விரும்பத் தக்கதாகவே இருக்கும். பொதுவாகவே, மொழிக் கல்வி என்பது இத்திட்டத் தைப் பொறுத்தவரை, கற்கவும் புரிந்துகொள்ளவும் கடுமை உடைய இலக்கண இலக்கிய மொழியியல் பாடங்களை உள்ளடக்கியதாக இருக்காது.

பாடத்திட்டத்தின் அளவு கருதியும் கற்பவர்க்கு வரையறை கருதியும் வாழ்நாள்பயன் கருதியும் தமிழ்த்தாள் திருக்குறள் ஒன்றை மையமிட்டே இருக்கலாம். இனம் மதம் குலம் என்னும் எல்லைகள் தாண்டிய திருக்குறள் பொதுமைப்பட்டிருப்பதால் எல்லோருக்குமான அதன் ஏற்புத்தன்மை இயல்பானதாக இருக் கும். உணர்வழுத்தம், உளச்சோர்வு ஆகியவற்றால் ஒளி குன்றித் தவிக்கும் மாணவருக்கும் தன்னம்பிக்கை, ஊக்கம் முயற்சி வினைபுரி திறன் ஆகியவற்றால் கைகொடுக்கும். படிப்பில் வெற்றிகாணச்செய்வதோடு தக்க குடிமக்களாக அவர்களைத் திருக்குறள் வார்த்தெடுக்கும்.

தமிழ் மொழியில் எழுதப்பட்டிருப்பினும் திருக்குறள் தமிழ் பற்றியது அன்று, தமிழர்களையோ தமிழ்நாட்டையோ பற்றியதும் அன்று. எந்தமொழியைத் தாய்மொழியாய்க் கொண்டிருப்ப வரும் எளிய பயிற்சியின்வழிப் பெறும் திறத்தால் திருக்குறள் கற்பது எளிது.

ISSN 2320-4842

இவ்வாறு திருக்குறள் அடிப்படையில் ஒரு தேர்வுத்தாள் இடம்பெறுமாயின் எதிர்காலத்தில் திருக்குறள் கற்றவர்களாகவே அனைத்து மருத்துவர்களும், பொறியியல் வல்லுநர்களும், வேளாண் விஞ்ஞானிகளும், தொழில்அதிபர்களும், வாணிகர்களும், வழக்கறிஞர்களும், நீதிபதிகளும், பிறரும் நமக்குக் கிடைப்பர். சமூகப் பொதுவெளியில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அசைவுகள் ஏற்பட்டு நெறி திறம்பா வாழ்க்கை மலரவும் வாய்ப்பு ஏற்படும்.

சீனாவில் இப்படி எளிய முறைவழி ஞானி கன்பூசியஸ் தத்துவங்களைப் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்து கல்வியாக்கியுள்ளதை உலகம் அறியும்.

**ஒருங்குறி (UNICODE) எழுத்துருவில் மட்டுமே கட்டுரை அனுப்பப்பட வேண்டும்.**

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்
*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10,000/- | US | $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US | $ 700 |

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |